Reg. M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 33 | விகாரி தை 1960 ஜனவரி | இதழ் 1

## சமய உணர்வு

(முருகவேள்)

ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும், சில பல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ இன்றியமையாமைகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் சமய வுணர்வையும் கடவுள் நம்பிக்கையையும் எழுப்பியே விடுகின்றன. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒருபிடி சாம்பர் ஆகியே ஒழிகின்றனர். நிலைபேறுடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலைபேறின்றி அழிந்து மறைந்துபோதலை நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும், பெருமிதமும், முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து போகின்றன. பெருத்த துன்பங்களும் நோய்களும் தொல்லைகளும் நேருங்காலெல்லாம், மனிதன் தன்னுடைய சிறுமையினை உணர வேண்டியவன் ஆகின்றான். எல்லோரையும் அடக்கியாண்டு, யாவும் தன்னாலேயே நடப்பனவாகக் கருதித் தருக்கிக் களித்து நிற்கும் கயவனும், தன்கண் நிகழும் காம வெகுளி மயக்கங்களும் பிறவும் தன்னை ஆட்டிப் புடைத்து அலைப்பத் தான் அவற்றிற்கு அடங்கி நின்று, 'அந்தோ வினையே' என்று அழுங்கித் துன்பம் உழக்கின்றான். தன்னுடைய அறிவும் முயற்சியும் பிறவும் ஒரு வரையறைக்கு உட்பட்டனவே என்று உணர்கின்றபோது, வரையறைக்கு உட்

படாத அறிவும் ஆற்றலும் இன்பமும் உடைய பொருள் துணையை அடைய மனிதன் பெரிதும் ஆவலுற்று அ கின்முன்.

" ஒருவனே டொருத்தி ஒன்றென் றுரைத்திடும் உலக மெல்லா
வருவதும் வந்து நின்று போவதும் ஆத லாலே
தருபவன் ஒருவன் வேண்டும்! தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே "

எனச் சிவஞானசித்தியார் கூறுதல்போல, பரந்துபட்ட இவ்வுலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அமைந்திருந்து கருதிக் காணுந்தோறும், இவற்றிற்கெல்லாம் காரணமாக இலங்கும் ஒரு முழுமுதற் பெரும்பொருளின் உண்மையினை நாம் உடன்படவே வேண்டியுள்ளது. நாம் நினைப்பது ஒன்றாக இருப்ப, நிகழ்வதோ பிறிதொன்றாக இருக் கின்றது. எத்துணை உயர்ந்த இன்பங்களை நுகர்வோனும், சின்னளில் அவற்றினை வெறுத்தொதுக்கி இத்தகையதென்று கூற இயலாத வேறேதோ ஒரு பேரின்பத்தினை விழைந்து நின்று, உள்ளம் அமைதியற்று ஏக்கற்று அலமருகின்முன். நமக்குத் துணையென நம்மாற் கருதப் பெறுபவர்கள் பலரும் நம்மைக் கைவிட நேர்ந்த நிலையில், " காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன் ?" எனக் கண்ணகியார் அரற்றியதே போல, ஏதோ ஒரு பெரும் பொருளின் துணை வேண்டி, வானை நோக்கி வருந்திக் கதறி அலறும் நிலையிலுள்ளோம்! இனைய செய்திகள் பலவும் கருதியே, ஆசிரியர் இளங்கோவடிகள் போன்ற தமிழ்ப்பெருஞ் சான்றோர்கள் பலரும் " தெய்வம் தெளிமின் ! தெளிந்தோர்ப் பேணுமின் !" என நம்மனோர்க்கு அறிவுறுத்திச் சென்றுள்ளனர்.

இங்ஙனமே, இந்நாளில் உலகப்புகழ் பெற்றுவிளங்கும் மேலைநாட்டு அறிஞர்கள் பலரும் கூறிவருவது நாம் அணை வரும் அறிந்தின்புறற்பாலதாகும்.* " கடந்த முப்பது ஆண்டு

*" During the past thirty years, people from all the civilised countries of the earth have consulted me... Among all my patients in the

களாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலுமுள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில்—அதாவது, முப்பத்தைந்து வயதுக்கு மேல்—தமது இன்னல்கள் தீருதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள், ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமயமும் அவ்வக்காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவுணர்ச்சியை, அவர்கள் பெறாமல் இழந்துவிட்டமையேயாகும். அவர்களில், ஒருவராவது மீண்டும் சமயவுணர்வு கைவரப்பெறாமல், உண்மையில் பிணி தீரப்பெற்றிலர்....'' என உலகப் புகழ்பெற்ற மனவியல் அறிஞர் ஆகிய பேராசிரியர் ஜங் என்பார் கூறுவது ஈண்டு உணரத்தக்கது. ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான் "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் - மனக்கவலை மாற்றல் அரிது'' என இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அருளிச்செய்தது பொய்யாமொழியே யன்றோ?

இவ்வாறே, உலகப் புகழ்பெற்ற மற்றொரு பேரறிஞர் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறுவதும் ஈண்டுக் கருதியுணரற்பாலது. "நம் காலநிலைக்கு வேண்டுவன சில இருக்கின்றன; விலக்கப்பட வேண்டுவன சில உள்ளன. நம் காலநிலையில் அருளுணர்வும், 'மனித இனம் இன்பமாக வாழ வேண்டும்' என்னும் விருப்பமும் தேவைப்படுகின்றன.

---

second half of life—that is to say, over thirty-five years—there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life. It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook ''

—*Professor Jung*.

எல்லாவற்றினும் மேலாக, திடமான நம்பிக்கையும், புதியன படைத்தலில் துடிப்பும் இக்காலத்திற்கு இன்றியமையாதன வாகும். நான் கூறப்புகும் செய்தியின் அடிப்படை அல்லது வேர் யாதெனின், மிக எளிமையானதும் மிகப் பழமைமுறை யில் அமைந்ததுமான ஒன்றேயாம். நான் கூற முற்படுவது மிகமிக எளிமையும் பழைமை-முறையும் வாய்ந்ததாகல்பற்றி, ஒரு சிலர் என்பால் புன்முறுவல் பூத்து ஏளனம்செய்யக் கூடுமே என்றஞ்சி, அதனைக் குறிப்பிடுவதற்குக்கூட நான் பெரிதும் நாணம் கொள்ளுகின்றேன். நான்கருதும் பொருள்—அதனைக் குறிப்பிடுவதற்காக, அருள்கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்—அன்பு, 'கிறித்தவ அன்பு' அல்லது சமய வுணர்வோடு கூடிய இரக்கவுள்ளம் ஆகும். இவ்வுணர்வை நீங்கள் பெறுவீர்களாயின், உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும், செயல்களுக்கு ஒரு வழிகாட்டியும், மனவுறுதிக்கு ஒரு காரணமும், அறிவின் நேர்மைக்கு ஓர் இன்றியமையாத தேவையும் பெற்றவர்கள் ஆவீர்கள்''* என்பது, உலகப் புகழ் பெற்ற தத்துவ-கணிதப் பேராசிரியர் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்களின் கூற்று. இவற்றினுலெல்லாம், மனிதகுல வாழ்க்கைக்குச் சமயவுணர்வு எத்துணை இன்றியமையாதது என்பது பெறப்படும்.

---

*"There are certain things that our age needs, and certain things it should avoid. It needs compassion, and a wish that mankind should be happy : it needs, above all, courageous hope and the impulse to creativeness... The root of the matter is a very simple and old-fashioned thing, so simple that I am almost ashamed to mention it, for fear of the derisive smile with which wise cynics will greet my words. The thing I mean—please forgive me for mentioning it—is love, Christian love, or compassion. If you feel this, you have a motive for existence, a guide in action, a reason for courage, an imperative necessity for intellectual honesty." —*Bertrand Russell.*

# தேவாரத் தொரு பாடல் உரை

(சித்தாந்தப் பிரசங்காமிர்தம், பூ. சமரபுரி முதலியார், தாம்பூரம்)

திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்களுள் பல, ஞானப் பொருள்கள் நிறைந்தவைகள். முக்கியமாக ஆண்டவனை அடைய வேண்டுமானால் மெய்ஞ் ஞானிகள் என்ன செய்ய வேண்டுமென்று நினைப்பூட்டு கின்றார். அந்தப் பாடல்களுள் "வீடலால வாயிலாய்" என் பது ஒன்று. அதன் உரை பின்வருமாறு :—

திருச்சிற்றம்பலம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே !
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

(திருஆலவாய் – திருஞானசம்பந்தர்.)

கொண்டு கூட்டு :—விழுமியார்கள், வீடு அவாய் அ(ல்)லால் இலாய், நின்கழல் பாடலால் பரவ, அவாய் (அவ்விழுமியார் மனத்தை) இல் ஆய் நின்ற பண்பனே ! காடு அ(ல்)லால் அவாய் இலாய் ! நீள் கடி கபாலி மதில் கூடல் ஆலவாய் இல் ஆய் குலாயது என்ன கொள்கை ?

பதவுரை :—விழுமியார்கள் = (வீடு அடையும் பக்குவ முடைய) அறிவின் மேலவர்கள்

வீடு = முத்தியை

அவாய் = விரும்பி

அலால் = முத்தியல்லாத மற்றதில்

இலாய் = விருப்பம் இல்லையாய் (என்பது வீட்டின்பம் ஒன் றையே விரும்பி)

நின் கழல் = தேவரீருடைய திருவடிகளை

பாடலால் பரவ = தோத்திரப்பாடல்களால் துதிக்க

அவாய்=(தேவரீர் அப்பாடலுக்கு) ஆசைப்பட்டு

இல் ஆய்=(அப் பெரியார்களுடைய மனத்தையே) இடமாகக் கொண்டு

நின்ற=(நீங்காது நிலைத்து அத்துவிதமாகக் கலந்து) நிற்கும்

பண்பனே=அருட்பண்பு உடையவரே ! ('ஒட்டி வாழ்தி' என்னும் அப்பர் திருவாக்கும் இப்பொருட்டு)

காடு அலால்=(எல்லா உயிர்களும் ஒடுங்கும்) சர்வ சம்மார இடத்தை அல்லாது (வேறு இடத்தை)

அவாய் இலாய்=விரும்பித் தங்காதவரே ! (இப்போது)

நீள் கடி=நீண்ட காவலாகவுள்ள அல்லது விளக்கம் அமைந்த (கடி=காவல், விளக்கம்)

கபாலி மதில்=கபாலி மதிலை உடைய

கூடல் ஆலவாய்=நான்மாடக் கூடல் என்னும் திருவாலவாயை

இல் ஆய்=இருப்பிடமாகக் கொண்டு

குலாயது=விரும்பி எழுந்தருளி இருப்பது

என்ன கொள்கை=என்ன காரணம் என்பதை அடியேங்களுக்கு விளங்க உரைப்பீராக.

இனி, வீடல் அவாய்=முத்தி அடைதலை விரும்பி, நின் கழல்=தேவரீருடைய திருவடிகளை, இலாய்=அதற்குரிய இடமாய், அவாய்=விரும்பி, பாடலால் பரவ=தோத்திரப் பாடல்களால் துதிக்க—என்றும் பொருள் உரைக்கலாம். அப்போது, வீடலால் என்பதிலுள்ள ஆல் அசை.

இரண்டாம் அடியில், இலாய்ப்பரவ என்பதில் பகரமும், நான்காம் அடியில் இலாய்க் குலாயது என்பதில் ககரமும் தொகுத்தல் என்னும் செய்யுள் விகாரம்.

———

# சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 54-வது ஆண்டு அறிக்கை

(ஆண்டு 1959)

திருவருள் துணைகொண்டு சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 1959-ஆம் ஆண்டு அறிக்கை சமாஜப் பேரவையின் முன் சமர்ப்பிக்கப்படுகிறது.

## சமாஜப் பணியாளர்கள்

**தலைவர் :** திரு. இராவ்சாயிப். நல். முருகேச முதலியார், பி.ஏ. அவர்கள்.

**துணைத்தலைவர்கள் :** (1) திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல், டி. அவர்கள்; (2) சித்தாந்த சிகாமணி - திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி. அவர்கள்.

**செயலர் :** (1) திரு. கீ. இராமலிங்க முதலியார், எம். ஏ., அவர்கள்.

**உதவிச் செயலர் :** (2) திரு. மா. ப. தியாகராஜ முதலியார், பி. ஏ. அவர்கள்.

**பொருட்காப்பாளர் :** திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார், எம்.ஏ. அவர்கள்.

சைவ சித்தாந்த மகா சமாஜம் முதன் முதலில் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் விசுவாவசு ஆண்டு ஆனி மீ (7–7–1905) வெள்ளிக்கிழமை தொடங்கப் பெற்று, இன்றுவரை இறைவன் திருவருளால் மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க வேண்டுமென்ற பெருநோக்குடன் சமயத் தொண்டாற்றி வருகின்றது. சபைகளின் பதிவுச்சட்டப்படி 11–12–1915ல் S. No. 6 of 1915–16 என்ற எண்ணில் இச்சமாஜம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு மயிலம் எனும் முருகன் திருப்பதியில் இச்சமாஜத்தின் 53-வது ஆண்டு விழாவை ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் மூன்று நாட்கள் 26–12–58 முதல் 28–12–1958 வரை சிறப்பாக நடத்தித் தந்தனர். அப்பா. திரு. வா. தி. மாசிலாமணி முதலியாரவர்களின் அன்புகெழுமிய முயற்சியால் இவ்வாண்டின் சமாஜ மாநாடு வாலாஜாபாத்தில் நடைபெறுகிறது.

## சமாஜத்தின் நோக்கங்கள்

உய்யும் வகை யாதெனவேட்கை கொண்டு வினவும் மக்கள் உலகெங்குமே பரவி நிற்கின்றனர். சைவ சமயத்தில் அவ்வேட்கையைத் தணிக்கவல்ல தக்க விடையும் வழியும் பொதிந்து கிடப்பதை, உய்யும்வகை நாடும் மக்கள் எங்கெங்கு பரவி இருக்கின்றார்களோ ஆங்கெல்லாம் நன்கினிது விளங்கச் செய்யவேண்டுமென்பதே சமாஜத்தின் முக்கிய நோக்கமாகும். அதற்குதவியாகச் சமய நூல்களை அடக்க விலைக்குப் பதிப்பித்து வழங்கல், "சித்தாந்தம்" என்னும் உயரிய பத்திரிகையை மாதந்தோறும் அரிய கட்டுரைகளுடன் வெளியிடல், சமயச் சொற்பொழிவுகளை மாதந்தோறும் ஆங்காங்கு நிகழ்த்தல், சைவ சமய பரமாசாரியர்கள் நாயன்மார்கள் சந்தான குரவர்கள் ஆகியவர்களுடைய திருநட்சத்திரங்களைக் கொண்டாடுதல், சிவாலயங்களில் வார வழிபாடு நடத்துதல், "சைவப் புலவர் தேர்வு" "இளஞ் சைவப் புலவர் தேர்வு" ஆங்காங்கு நடாத்தி மாணவர்கள் சைவ சமய நூல்களைக் கற்க ஊக்குவித்தல், துண்டுப் பிரசுரங்கள் மூலம் சமய போதனைகள் - நாயன்மார்கள் சரித்திரங்கள் வெளியிடுதல், தக்கவர்கள் ஆதரவுகொண்டு தேவார வகுப்புகளைக் கூடிய இடங்களில் ஏற்படுத்தி மாணவர்களுக்குப் பன்னிரு திருமுறைகளைக் கற்பித்துப் பண்ணிசையுடன் தேவாரப் பாடல்களைப் பாடக் கற்பித்தல் முதலியன செய்து வருகின்றது.

இவ்வாண்டு நிகழ்த்தப்பட்ட இத்தகைய பணிகளின் விவரங்களை ஈண்டு நோக்குவோம் :

## வெளியீடுகள்

மார்கழி மாதம் 'திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி படிப்பவர்களுக்குப் பயன்படவும், போட்டிகள் வைத்து மாணவர்களுக்குப் பரிசு வழங்க உதவி புரியவும் திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கட்கு மயிலை கிழார் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி.ஏ.,பி.எல். அவர்கள் எழுதிய எளிய உரையுடன் 6 புதுக்காசு விலையில் 3000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

திரு. மா. ப. தியாகராஜ முதலியார், பி. ஏ. அவர்களின் யந்திர விரிவுரையுடன் கூடிய கந்தரனுபூதி நூல் 120 பக்கங்களில் சமாஜ வெளியீடாக வெளிவருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் வெளியிடும் புத்தகங்களை மக்கள் பெரிதும் வாங்கிப் பயன்படுத்தாக் குறைபாட்டினால், சமாஜ மூலதனம் சுமார் ரூ. 4000 முடங்கிக்கிடக்கின்றது. அங்கத்தினர்களும் பொதுமக்களும் அந்நூல்களை விரைவில் விலைப்படுத்த உதவி புரியவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### "சித்தாந்தம்"

இச் சிறந்த மாத சஞ்சிகை சமாஜ அங்கத்தினர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. போதிய அங்கத்தினர்களுடைய தொகைப் பெருக்கம் இல்லாக் குறையால், இப் பத்திரிகையின் அளவு குன்றிச் சிலகட்டுரைகளே வெளியிடப்படுகின்றன. தற்போதுள்ள அங்கத்தினர் தொகை 523. சென்ற ஆண்டிருந்த தொகையைவிட 25 அதிகப்பட்டிருந்தும் இவ்வளர்ச்சி போதாது என்பது சொல்லாமலே விளங்கும். ஒவ்வொரு அங்கத்தினர்களும் இதை மனத்தில்கொண்டு குறைந்தது ஒவ்வொரு புதிய அங்கத்தினரைச் சேர்த்துவைப்பீர்களானால் சமாஜ அங்கத்தினர் தொகை இரட்டிக்கும்; சமாஜப் பொருளாதாரநிலை வன்மையுறும். இச் சஞ்சிகையையும் அதிகப் பக்கங்களுடனும் அரிய இனிய பல கட்டுரைகளுடனும் வெளியிட முடியும்.

## கூட்டங்கள்

இவ்வாண்டு நடந்த செயற்குழுவின் கூட்டம் 8(எட்டு). பொதுக் கூட்டங்கள் 2. 21–12–1958ல் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் நடந்த பொதுக் கூட்டத்தில் 53-வது ஆண்டு அறிக்கையும், வரவு செலவுக் கணக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டன. 28–12–1958ல் மயிலத்தில் நடந்த ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் இவ்வாண்டின் சமாஜப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## சிறப்புக் கூட்டங்கள்.

(1) 16-2-59 திங்கட்கிழமை மயிலேக் கபாலீச்சரத்தில் அமைச்சர் திரு. எம். பக்தவத்சல முதலியார் அவர்கள் தலைமையில், சமாஜத்தின் சார்பில் தவத்திரு ஞானியார் அடிகள் நினைவு நாள் கொண்டாடப்பட்டது.

(2) 5-4-59 ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் திரு. அ. உத்தண்டராம பிள்ளை அவர்கள் தலைமையில் திரு. ம. பா. நினைவு நாள் விழா கொண்டாடப்பட்டது. அன்று திரு. மணலி-எஸ். இராமகிருஷ்ண முதலியார் பி.ஏ., அவர்கள் சமாஜக் கட்டிட நிதிக்காக ரூ. 6000 நன்கொடை அளிப்பதாகத் தெரிவித்தார்கள். அத்தொகை போதாத காரணத்தால் அதை வாங்கிப் பயன்படுத்த முடியாத நிலையில் சமாஜ மிருக்கிறது. இன்னும் போதிய தொகை இருந்தால் மனையுடன் கட்டிடம் அமைக்கமுடியும். எனவே அன்பர்கள் நன்கொடையளிக்கமுன்வரின் சமாஜத்திற்கென ஒருகட்டிடம் அமைக்கலாம்.

(3) 2-5-59 திருநாவுக்கரசர் திருநாள் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்ரமணிய பக்தஜன சபையில் திரு. அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட். அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. திருமதி வித்வான் மீனுட்சிசுந்தரசிவை அவர்கள் அப்பாருள்மொழியைப் பற்றிப் பேசினார்கள்.

(4) 24-5-59 கபாலீச்சரத்தில் திரு. சி. என். சிங்காரவேல் முதலியார், எம்.ஏ. அவர்கள் தலைமையில், திருஞானசம்பந்தர்

திருநாள் கொண்டாடப்பட்டது. திரு. ஆறுமுக முதலியா ரவர்கள் சொற்பொழி வாற்றினார்கள்.

(5) 14-6-59 இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் திரு. நல். முருகேச முதலியார் பி.ஏ. அவர்கள் தலைமையில் சேக்கிழார் திருநாள் கொண்டாடப் பட்டது. திரு. ஜி. கல்யாணம் பிள்ளை, எம்.ஏ., திரு. முருக வேள், எம்.ஏ., எம்.ஓ.எல். முதலியோர் சொற்பொழிவாற்றி னார்கள்.

(6) 19-7-59 மாலை திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. அவர்கள் தலைமையில் மாணிக்கவாசகர் விழா கொண்டாடப்பட்டது. வித்வான் பிச்சைபிள்ளை (கலைக் கல்லூரிப் பேராசிரியர்) சொற்பொழிவாற்றினார்கள்.

(7) 10-8-59 மாலை திருமயிலைக் கபாலீச்சரத்தில் சுந்தரர் திருநாள் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தைச்சார்ந்த திரு. சுவாமி பரமானந்தர் அவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது. திரு. ஜி. கல்யாணம், எம்.ஏ. அவர்களும், வித் வான் பாலூர் கண்ணப்ப முதலியார், பி.ஓ.எல். அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

(8) 1-11-59 ஞாயிறன்று மாலை தருமபுர ஆதீனப் பிர சார நிலையத்தில் ஸ்ரீ மெய்கண்டதேவர் நினைவுத் திருநாள் சித்தாந்த சிகாமணி - திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி. அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. சிவ ஞானபோதப் படனமும் செய்யப்பட்டது. தினமும் சைவ சமய அன்பர்கள் இந்நூலைப் பாராயணம் செய்வதற்கு 12 புதுக்காசு விலையில் சிறிய புத்தகமாகச் சமாஜம் வெளியிட் டுள்ளது. அதை வாங்கி அன்பர்கள் பயன்படுத்தவேண்டும்.

(9) 11-11-59-ல் திருப்போரூரில் முருகன் செந்தமிழ்க் கழக முதலாண்டு விழாவைத் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., துணை ஆணையாளர் அறநிலையப் பாதுகாவல்துறை, அவர்களின் தலைமையில் சமாஜ அங்கத் தினர்கள் சென்று நடத்திவைத்தனர். திரு. ஜி. கல்யாணம்

பிள்ளை, எம்.ஏ., திரு. ஜி. வடிவேலாயுதம், எம்.ஏ., திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியார், பி.ஏ., பி.டி., திரு. புலவர் முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். திரு. வித்வான் அம்பைசங்கரனார் நன்றியுரை வழங்கினார்கள்.

(10) தருமபுர ஆதீனப் பிரசார நிலையத்தார் நடத்திவரும் மாத வழிபாட்டுக் கூட்டங்களிலும் சமாஜம் பங்கெடுத்து வருகிறது. அச்சிறுபாக்கம், திருப்பாசூர், திருவலிதாயம், திருஒற்றியூர், திருவான்மியூர் முதலிய தலங்களில் இக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

## மாநாடுகளும் ஆண்டு விழாவும்

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 53-ம் ஆண்டு நிறைவு விழாவையொட்டிச் சைவர் மாநாடு, சைவ மங்கையர் மாநாடு, சைவ இளைஞர் மாநாடுகள், மயிலத்தில் 1958-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முறையே 27, 28, 29 தேதிகளில் நடைபெற்றன. அவற்றைச் சிறப்புற நடத்தித்தந்த ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகள் அவர்களுக்குச் சமாஜம் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது.

அவ்விழாவைத் துவக்கிவைத்த உயர்மன்ற நீதிபதி - திரு. வி. சுப்பிரமணிய நாடார் அவர்களுக்கும், சைவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய சித்தாந்த சிகாமணி - திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்களுக்கும், சைவ மங்கையர் மாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு. ந. மங்கையர்க்கரசி அம்மையார் அவர்களுக்கும், இளைஞர் மாநாட்டுத் தலைவர் திரு. அடிகளாசிரியர் அவர்களுக்கும் சொற்பொழிவு ஆற்றிய அன்பர்கட்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

## சமய அறிவு வளர்ச்சித் தேர்வுகள்

இவ்வாண்டு 22-11-1959-ல் சைவப் புலவர் தேர்வும் இளஞ் சைவப் புலவர் தேர்வும், சென்னையில் சமாஜ அலுவலகத்திலும், இலங்கையில் விவேகானந்த சபையிலும், யாழ்ப்பாணத்தில் நாவலர் பாடசாலை வண்ணார் பண்ணையிலும்,

கோவையில் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியிலும், தஞ்சைக் கருந்திட்டைக்குடியில் குமாரசாமி உயர்நிலைத் தொடக்கப் பள்ளியிலும், நாகர்கோயில் தேசிக விநாயகர் தேவஸ்தான உயர்நிலைப்பள்ளியிலும் நடத்தப்பட்டன.

தேர்வில் வெற்றிபெற்ற சைவப் புலவர்கள் : அ. சண்முகசுந்தரம் பிள்ளை, ஆ. இராமசாமி, மு. ந. மாசிலாமணி, மா. வீரபத்திரன், எஸ். ஆர். தேமொழி, ஏ. அழகப்ப பிள்ளை, அ. சிவசுப்ரமணிய பிள்ளை, வ. சித்திவிநாயகம்.

வெற்றிபெற்ற இளஞ் சைவப் புலவர்கள் : செல்வி எஸ். மங்கையர்க்கரசி, கே. செல்லப்ப கவுண்டன் (சிவநேசன்).

ஏனைய ஆண்டுகளைவிட இவ்வாண்டில் தேர்ச்சிபெற்றவர்களின் தொகை அதிகமிருப்பது சைவ நூல்களில் இளைஞர்களுக்குள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது.

இத்தேர்வுகளை வெளி நாடுகளில் நடத்தித்தந்த திரு. மயில்வாகனன், இலங்கை; திரு. வித்துவான்-நடேசகவுண்டர், கோவை ; திரு. வள்ளிநாயகம் பிள்ளை, நாகர்கோயில்; கருந்திட்டைக்குடி திரு. குமாரசாமி உயர்நிலைத் தொடக்கப் பள்ளித்தலைமை ஆசிரியர்; திரு. கே. முனுசாமி முதலியவர்களுக்குச் சமாஜம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

வரும் ஆண்டுகளில் இன்னும் பல மாவட்டங்களில் ஆசிரியர்கள் இதில் பங்கெடுத்துக்கொண்டு மாணவர்களைச் சமயப் பயிற்சியில் ஊக்குவிக்கவேண்டும் என்று சமாஜம் கேட்டுக்கொள்கிறது.

## தேவார இசை வகுப்புக்கள்

இவ்வாண்டு சமாஜச் செயற்குழு உறுப்பினராக உள்ள திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம்.ஏ. (ருக்மணி குக்கர் கம்பெனி, உரிமையாளர்) அவர்கள் முயற்சியால் தேவாரவகுப்புகள் பின்வரும் இடங்களில் நடத்தப்படுகிறது: (1) பனைமரத்தொட்டி சுப்பிரமணிய சுவாமிகோயில், இராய

புரம்; (2) இராயப்பேட்டை-சுந்தரேசுரர் கோயில்; (3) தேவி பாடசாலை, பழைய மாம்பலம்; (4) விசாகத்தோட்டம்-இரவுப் பாடசாலை, சைதாப்பேட்டை; (5) ஏ. வி. எச். பாடசாலை, பல்லாவரம்; (6) வேளாளத் தேனாம்பேட்டை - பிள்ளையார் கோயில்; (7) தாம்பரம்-சுந்தரேசுரர் கோயில்; (8) குன்றத் தூர்-தேவார பாடசாலை; (9) இந்துமத பாடசாலை, வாலாஜா பாத்; (10) ஏகனாம்பேட்டை-ஆரம்பப்பாடசாலை; (11) சுந்தர விநாயகர் தேவார பாடசாலை, அம்பாசமுத்திரம். இன்னும் பல இடங்களில் தேவாரங்களைப் பண்ணிசையுடன் பாடங் கற்பிக்க அவர்கள் தக்க உதவி புரிவார்கள். அன்னாருக்குச் சமாஜம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

## பொருள் நிலை

54-வது ஆண்டு (1-12-1958 முதல் 30-11-59 வரை) வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆண்டின் இறுதியில் இந்தியன் பாங்கில் இருப்பு ரூ. 662-18. பொருளாளர் கை யிருப்பு ரூ. 56-43. கைவசமுள்ள புத்தகங்களின் விலை பெறுமானம் ரூ. 4326-03. பொருள் நிலை மிகவும் வருந் தத் தக்கதா யிருப்பதைச் சைவ அன்பர்கள் கவனித்துக் குறைவற ஆதரவு தரவேண்டுமென்று பெரிதும் மன்றாடி வேண்டுகிறோம்.

## விண்ணப்பம்

மேலே காட்டியுள்ள பொருள் நிலையையும் சமாஜம் செய்துவரும் பணியையும் நோக்குமிடத்துச் சமாஜ உறுப் பினர்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய முயற்சிகள் என்ன வென்பது சொல்லாமலே விளங்கும். அவைகளுள் முக்கிய மானவை (1) அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையை ஆயி ரத்துக்கு மேற்படச் செய்ய வேண்டுமென்பது. மாவட்டப் பிரதிநிதிகளும் சைவப் பெருமக்களும் இந்தப் பணியில் ஈடு பட்டு ஆவன செய்யுமாறு வேண்டப்படுகிறது. சைவ சித் தாந்த மகா சமாஜம் தொடங்கி இற்றைக்கு 54 ஆண்டுகளாகி

யும் தனக்கென ஒரு கட்டிடமின்றி யிருத்தல் மிக வருந்தத் தக்க நிலையாகும். இக்குறைபாடு நீங்க வேண்டுமென்று ஒவ்வொரு மாநாட்டிலும் உறுப்பினர்கள் பேசியிருக்கின்றனர். இவ்வாண்டு இளைஞர் மகாநாட்டைத் துவக்கிவைக்கும் திரு. மணலி-இராமகிருஷ்ண முதலியார், பி.ஏ. அவர்கள் கட்டிட நிதிக்கு ரூ. 6000 தருவதாகத் தெரிவித்துள்ளார்கள். அவரைப்போன்று இன்னும் சில பெருமக்கள் உதவிபுரிய முன்வருவார்களேயானால் கட்டிடமில்லாக் குறைபாடு எளிதில் நீங்கிவிடும்.

## நன்றி

'சித்தாந்தம்' பத்திரிகைக்குக் கட்டுரை எழுதியனுப்பிய அன்பர்களுக்கும், விளம்பரம் தந்த தென்னிந்தியத் திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார்க்கும் சமாஜம் நன்றி பாராட்டுகிறது. சமாஜக் கூட்டங்களை அடிக்கடி நடத்த இடந்தந்துதவும் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையினர்க்குச் சமாஜம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. புதிய உறுப்பினர்களை இவ்வாண்டு சேர்த்துதவிய சைவப் பெருமக்களுக்கும், "சித்தாந்தம்" இதழைக் காலந் தாழ்த்தாது அச்சிட்டுத் தரும் சாது அச்சகத்தினர்க்கும், இவ்வாண்டு விழாக்களில் சொற்பொழிவாற்றிய அறிஞர்களுக்கும், சைவப் பணியை ஏற்று நடத்திவரும் தொண்டர்களுக்கும், சைவர்கள் யாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

செயற்குழுவினர் அனுமதிப்படி,

இப்படிக்கு,

சென்னை
15-12-59.

கீ. இராமலிங்கம்
மா. ப. தியாகராஜன்
செயலர்கள்.

## சைவ சித்தாந்த மகா சமாஜ 54-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்கு

[1-12-58 முதல் 30-11-59 வரை]

| வரவு | ரூ. | ந.பை | செலவு | ரூ. | ந.பை |
|---|---|---|---|---|---|
| ஆரம்பக் கையிருப்பு | 20 | 32 | 'சித்தாந்தம்' அச்சுக்கூலி முதலியன | 1689 | 26 |
| ஆரம்ப இந்தியன் பாங்க் இருப்பு | 1339 | 23 | காகிதம் முதலியன வாங்கியது | 926 | 48 |
| சந்தா வரவு | 1144 | 00 | தபால் கூலி | 431 | 40 |
| தேர்வுக் கட்டணம் | 76 | 00 | போக்கு வரவுச் செலவு | 18 | 50 |
| புத்தக விற்பனை | 1057 | 86 | விளம்பரச் செலவு | 8 | 75 |
| வி. பி. தபால் செலவு வரவு | 112 | 36 | விழாச் செலவுகள் | 35 | 00 |
| பாங்கி வட்டி | 28 | 23 | கையிருப்பு | 56 | 43 |
| விளம்பர வருமானம் | 50 | 00 | ஆண்டு முடிவு இந்தியன் பாங்க் இருப்பு | 662 | 18 |
| | 3828 | 00 | | 3828 | 00 |

சமாஜப் பொருள் வலிவு :

முன்னாட் பொருளாளர் திரு. T. K. சுந்தரம் பிள்ளை அவர்களிடமிருந்து வரவேண்டியது ரூ. 414 75

கையிருப்புப் புத்தகங்களின் (விற்பனை விலை) மதிப்பு ரூ. 4955 18

புத்தக விற்பனைமூலம் பாக்கி வரவேண்டியது ரூ. 169 75

கீ. இராமலிங்கம்,

S. திருநாவுக்கரசு, ஆண்டுப் பரிசோதகர். M. சிவராமன், மாதப் பரிசோதகர். C. N. சிங்காரவேலு முதலியார், பொருளாளர். M. P. தியாகராஜன், செயலர்கள்.

# பிற்காலச் சைவம்*

(பேராசிரியர்-திரு. பூ. ஆலாலசுந்தரனார், M.A.)

தென்பாண்டி நாட்டை வீரமாறன் என்ற பாண்டியன் கி. பி. 1473-முதல் கி. பி. 1506-வரை ஆண்டு வந்தான். அவன் காலத்தில் வாழ்ந்த புராணத்திருமலைநாதர் என்பவர் 813 திருவிருத்தங்களைக் கொண்ட சிதம்பர புராணத்தையும் 516 கண்ணிகளைக் கொண்ட மதுரைச் சொக்கநாதர் உலா என்னும் நூலினையும் இயற்றினார். சொக்கநாதர் உலா மகாமகோபாத்தியாய டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர் அவர்களால் சிறந்த முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. விஜய நகரத்து அரசரான கிருஷ்ணதேவராயர் (கி. பி. 1509-கி. பி. 1530) காலத்தில் சீர்காழியில் வசித்த தத்துவப் பிரகாசர் என்பவர் 337 திருவிருத்தங்களைக் கொண்ட தத்துவப் பிரகாசம் என்ற ஒரு சித்தாந்த நூலினை அருளிச்செய்தார். இந்நூலில் இவர் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பாதங்களையும் விளக்கிக் கூறியுள்ளார். சிவஞான சித்தியார் பரபக்கத்திற்கு உரை எழுதியவர் ஒரு தத்துவப் பிரகாசர். அவர் இங்குக் குறிக்கப்பட்ட தத்துவப் பிரகாசரின் வேறானவர். அவர் திருவொற்றியூர் ஞானப்பிரகாசரின் மாணவராவர். மறைஞான சம்பந்தர் என்ற பெயருடைய பல புலவர்கள் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. அவருள் ஒருவர் உமாபதி சிவாசாரியாரின் ஆசிரியரான மறைஞானசம்பந்தர். இவரது ஊர் கடவூர் என்றும், திருப்பெண்ணாகடம் என்றும் கூறுவர். இவரது காலம் உமாபதி சிவாசாரியாரின் காலமாகிய கி. பி. பதினான்காம் நூற்றாண்டாகும். மறைஞானசம்பந்தர் என்ற ஒருவர் சிதம்பரத்தில் குகை மடத்தில் வசித்து வந்தார். மறைஞானசம்பந்தர், மறைஞானசம்பந்த தேசிகர், மறைஞானசம்பந்த நாயனார் என்ற இப்பெயர்கள் இவரைக் குறிப்பதாகும். இவர் 1. தொல்காப்பியம் சிவமயம். 2. கமலாலய புராணம். 3. சிவதருமோத்தரம் 4. பதி பசு பாசப்பனுவல் 5. சங்கற்ப நிராகரணம் 6. பரமோபதேசம்

*சமாஜ ஆண்டு விழாச் சொற்பொழிவுக் கட்டுரையின் பிற்பகுதி.

7. முத்தி நிலை 8. சைவ சமய நெறி 9. அருணகிரிப் புராணம் என்ற நூல்களைச் செய்துள்ளார். "இவர் செய்த நூல்களுள்ளே தொல்காப்பியம் சிவமயம் என்பன இரு நூல்களா ஒரு நூலா என்பது விளங்கவில்லை. இருவேறு நூல்களென்பது பெரியோர் கொள்கை"* எனத் திரு. S. சோமசுந்தர தேசிகர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மறைஞானசம்பந்த தேசிகர் கமலாலய புராணம் கி. பி. 1545-ம் ஆண்டில் இயற்றியதால் இவர் பதினாறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவராவர். சிவஞான சித்தியாருக்கு உரை இயற்றிய மறைஞான தேசிகர் என்பவர் இவரது மாணவராவர்.

சிவாக்கிர யோகிகள் என்பவர் சூரியனார் கோயில் ஆதீன மடத்தைச் சார்ந்தவராவர். இவர் சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் இரண்டினுக்கும் உரை செய்துள்ளார். இவர் இயற்றிய நூல்கள் 1. சைவ சந்நியாச பத்ததி :— இது தஞ்சையையும் சோழ நாட்டினையும் ஆண்ட செவ்வப்ப நாய்க்கனுடைய வேண்டுகோளின்படி இயற்றப்பட்டது. ஸ்மார்த்தர்களைப்போல் சைவர்களும் சந்நியாசம் பெற உரிமையுடையவர் என்பதும் சைவ சந்நியாசிகளின் கடமை இன்னதென்பதும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இது வடமொழியில் இயற்றப்பட்ட நூலாகும். 2. கிரியா தீபிகை :—இது வடமொழியில் இயற்றப்பட்ட நூல்; ஒழுக்கங்களைப் பற்றிக் கூறுகின்றது. 3. சைவ பரிபாஷை :— இது சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் ஒரு உரைநடை நூல். 4. வடமொழிச் சிவஞானபோத சங்கிரக வியாக்கியானம் :—இது வடமொழியில் இயற்றப்பட்ட சிவஞானபோத உரைநூல். 5. சிவாக்கிர பாஷ்யம் :— சிவஞான போதத்திற்கு இயற்றப்பட்ட பேருரை நூல். 6. தேவிகா லோத்திரத் தமிழுரை :—இது தேவியின் சிறப்பைக் கூறும் நூல். 7. சர்வக்ஞானோத்தரத் தமிழுரை.—இது சிவபரத்துவம் கூறும் நூல். 8. அரதத்தாசாரியார் செய்த சுருதி சூக்திமாலை தமிழுரை :—இது வேதங்களின் கருத்

---

* தமிழ்ப் புலவர்கள் வரலாறு : பதினாறாம் நூற்றாண்டு—திரு. S. சோமசுந்தர தேசிகர். பக்கம் - 15.

தைக் கூறும். 9. சிவநெறிப் பிரகாசம் :—ஆசிரியர் தம் மாணவியாகிய சுவாந்த நாச்சியார் பொருட்டு இந்நூலை இயற்றினர். இது 215 திருவிருத்தங்களையுடையது. சிவநெறியைச் சுருக்கமாகக் கூறுகின்றது. இதற்குச் சிவாக்கிர யோகிகளின் மாணவரான நந்தி சிவாக்கிர யோகிகள் ஒரு உரை செய்துள்ளார். ஆசிரியர் இயற்றிய சைவ சந்நியாச பத்ததியில் அது தஞ்சையை அரசாண்ட சின்ன செவ்வாச்சுத நாய்க்கர் அவையில் சாலிவாகன சகம் 1486-ல் (கி. பி. 1564) அரங்கேற்றப்பட்டது என்ற அகச்சான்று காணப்படுவதால் ஆசிரியர் காலம் கி. பி. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

கமலை ஞானப் பிரகாசர் :—இவர் சரியை முதலிய நான்கு பாதங்களுக்கும் நூல்கள் பல இயற்றியுள்ளார். " அனுட்டான அகவல் " " புட்பவிதி " " பூமாலை " என்பன சரியா பாதத்தன. " சிவபூசை அகவல் " கிரியா பாதத்தினையும், " பிரசாத மாலை " யோக பாதத்தினையும், " சிவானந்த போதம் " ஞான பாதத்தினையும் விளக்கப்போந்தன. இவைகளையன்றி அத்துவாக் கட்டளை, அண்ணாமலைக் கோவை, திருவாரூர்ப் புராணம், திருமழுவாடிப் புராணம் முதலிய நூல்கள் இவரால் இயற்றப்பட்டன. இவரது மாணவர் பலராவர். அவருள் ஒருவர் தருமபுர ஆதீனத் தலைவரான குருஞானசம்பந்தராவர். தம் ஆசிரியர்மீது பல நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் ஒரு பாடலை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

"தாயே கமலையுண் ஞானப்ர காசநின் றன்னிடத்து
நாயே னுளத்தன் பொருசற்று மில்லைநல் லோர்கண்முன்னே
நீயே துணையென்றும் நின்னடி யானென்ற நின்பெயரும்
பேயேன் றினஞ்சொல் பிழைபொறுத் தாள்வை பெருமையினே."

ஒற்றியூர்ப் புராணம் பாடிய ஞானப்பிரகாசர், மாசிலாமணிச் சம்பந்தர், சேது புராணம் பாடிய வேதவனம் நிரம்ப வழகிய தேசிகர் முதலியோர், கமலை ஞானப்பிரகாசரின் மாணவராவர். இவர் இயற்றிய திருமழுவாடிப் புராணத்தில் காணப்பெறும் அகச்சான்றாலும் கி. பி. 1482-ல் எழுந்த

கல்வெட்டொன்றுலும் இவரது காலம் 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கூறலாம்.

குருஞான சம்பந்தர் :—திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் தலைவராக விளங்கிய இவர் பல நூல்கள் இயற்றியுள்ளார். 1. பண்டாரக் கலித்துறை :—இது தம் ஆசிரியரான ஞானப்பிரகாசர்மேல் பாடிய ஒரு தோத்திர நூல். 2. நவரத்தின மாலை :—தம் ஆசிரியர் சிவத்துடன் கலந்தபோது பாடிய நூல். 3. சொக்கநாதக் கலித்துறை:—இது தமது வழிபடு கடவுளான சொக்கலிங்கப் பெருமான் மீது பாடப்பட்ட நூல். 4. சொக்கநாத வெண்பா :—இது தம் வழிபடு கடவுளான சொக்கநாதரை முன்னிலைப்படுத்திச் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கிய நூலாகும். 5. சிவபோகசாரம்:—இது சைவசித்தாந்தக் கருத்தை விளக்கும் நூல். 6. முத்தி நிச்சயம் :—இது மறைஞான தேசிகர் பாடிய முத்தி நிலையினை மறுத்துச் சிவபெருமான் திருவடி அடைதலே முத்தி என்பதை விளக்குவதாகும். 7. திரிபதார்த்த தசகாரிய அகவல்:—இதில் தத்துவரூபம் முதலிய தசகாரியங்கள் விளக்கப்பட்டுள்ளன.

திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் :—இவர் திருவொற்றியூர்ப் புராணம் பாடியுள்ளார் ; சிவஞான சித்தியார் பரபக்கத்திற்கும் சங்கற்ப நிராகரணத்திற்கும் உரை எழுதியுள்ளார்.

மாசிலாமணிச் சம்பந்தர் :—திருவுத்தரகோசமங்கைப் புராணம் இவரால் இயற்றப்பட்டது. இவர் கமலை ஞானப்பிரகாசரின் மாணவராதலின் இவருடைய காலமும் பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கூறலாகும்.

நிரம்ப வழகிய தேசிகர் :—இவர் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். திருப்பரங்கிரிப் புராணம், சேது புராணம், சிவஞான சித்தியார் உரை, திருவருட்பயன் பொழிப்புரை, குருஞான சம்பந்தர்மாலை என்பன இவரால் இயற்றப்பட்டன. இவரது மாணவர் சம்பந்த முனிவர் கி.பி. 1592-ல் திருவாரூர்ப் புராணம் பாடினார் எனத்

தெரிவதால் அவருக்கு முற்பட்ட இவரது காலம் 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கூறலாம்.

அதிவீரராம பாண்டியர் :—இவர் இயற்றிய நூல்களை இலக்கிய நூல்கள், சமய இலக்கிய நூல்கள் என இரு கூறு படுத்திக் கூறலாம். காசிகண்டம் கூர்ம புராணம், இலிங்க புராணம், திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலானவை இவரால் பாடப்பட்டவை. பக்திச் சுவை நிரம்பப் பெற்றிருப்பதால் திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதிக்குக் 'குட்டித் திருவாசகம்' என்ற பெயரும் உண்டு.

சைவ எல்லப்ப நாவலர் :—இவர் தஞ்சை மாவட்டத்தில் காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகிலுள்ள இராதா நல்லூரில் பிறந்தவர் ; வேளாண் மரபினர். இவர் அருணைக் கலம்பகம், செவ்வந்திப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம் முதலியன இயற்றியுள்ளார். திருவருணைக் கலம்பகத்தில் இவர் பாடிய,

" சைவத்தின் மேற்சமயம் வேறில்லை
அதிற் சார்சி வமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம் இல்லெனும்
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார
மும்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற்
ருள்எம் உயிர்த்துணையே "

என்ற பாட்டு இவரது சமயப்பற்றினை விளக்குவதாகும். "சைவ எல்லப்ப நாவலர் தஞ்சை ஜில்லாவில் காவிரிப்பூம் பட்டினத்துக்கு அருகிலுள்ள இராதாநல்லூரிலே பிறந்தவர் என்று சிலரும் திருவண்ணாமலையை அடுத்த தாழை நகரிற் பிறந்தவரென்று சிலரும் கூறுவர். தாழை நகரிற் பிறந்தவரும் இராதாநல்லூரிற் பிறந்தவரும் ஒரே பெயரையுடைய இருவர் எனத் தெரிகின்றது."* திரு. S. சோமசுந்தரதேசிகர் அவர்கள் பல கல்வெட்டுச் சான்றுகளைக் காட்டித் தாழை

*செந்தமிழ் XXX 255—264.

நகரில் பிறந்தவர் எல்லப்ப நாயனார் (எல்லபூபதி) என்றும் அவர் திருவாரூர்க் கோவை, அருணையந்தாதி, சௌந்தரிய லகரி உரை முதலியன இயற்றியுள்ளார் என்றும் தாம் எழுதிய தமிழ்ப் புலவர் வரலாறு* என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எல்ல பூபதி என்பார் செவ்வப்ப நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவராதலின் அவரது காலம் கி. பி. 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

இதுகாறும் கி. பி. 14-ம் நூற்றாண்டு முதல் கி. பி. 16-ம் நூற்றாண்டு வரையிலுள்ள சைவ சமய நிலையைக் கண்டோம். யான் பேசுதற்குக் கொடுக்கப்பட்ட காலத்திற்குள் என் பேச்சை முடிக்க வேண்டியவனாய் இருப்பதால் இனிப் பேச இருப்பதைச் சுருக்கிக் கொள்கிறேன். பின்னர்ச் சமயம் நேரும்போது ஒவ்வொரு நூற்றாண்டின் சைவசமய நிலையினை விரிவாகக் கூறுவேன். இனி 17-ம் நூற்றாண்டின் சைவ சமய நிலையை ஆராய்வோம்.

**பதினேழாம் நூற்றாண்டு :**

சோழவள நாட்டில் திருமறைக்காட்டில் சைவ வேளாண் மரபில் பிறந்த பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் பாடியருளினார். திருவிளையாடற் புராணமும் சேக்கிழார் பாடியருளிய பெரிய புராணமும் சைவ சமயத்திற்கு இரண்டு கண்கள் எனப் போற்றப்படும். இத்திருவிளையாடற் புராணத்தினைப் பரஞ்சோதி முனிவர் சாலிவாகன சகாப்தம் 1526 கி. பி. 1604-ல் மதுரையில் வெள்ளியம்பலவாணர் சந்நிதியில் அரங்கேற்றினர் என்பர்.

திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் முதலிய இடங்களில் விளங்கிய சைவ மடங்களின் தலைவர்கள் சிறந்த சமயப்பணி ஆற்றுவாராயினர். 14-ம் நூற்றாண்டில் விளங்கிய உமாபதி சிவாசாரியாரின் முதல் மாணவர் அருள் நமச்சிவாய தேசிகர். இவருடைய மாணவர் திருவாவடுதுறையிலிருந்த

*தமிழ்ப் புலவர்கள் வரலாறு [பதினாறும் நூற்றாண்டு] பக்கம்—191.

சித்தர் சிவப்பிரகாசர். சித்தர் சிவப்பிரகாசரின் மாணவரான நமச்சிவாய மூர்த்திகள் திருவாவடுதுறை மடத்தினை நிலை நாட்டியவராவர். இவருடைய மாணவர் மறைஞான தேசிகர். இவர் அம்பலவாண தேசிகருக்கும் தட்சிணாமூர்த்தி தேசிக ருக்கும் ஞானவுரை பகர்ந்தார். தட்சிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம் உபதேசப் பஃறொடை என்ற இரண்டு ஞான நூல்களை இயற்றினார். அம்பலவாண தேசிகர் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசயமாலை, நமச் சிவாய மாலை என்னும் பத்து நூல்களை இயற்றியருளினார். இப்பன்னிரண்டு நூல்களுடன் ஈசான தேசிகர் இயற்றிய தச காரியமும், பின் வேலப்ப தேசிகர் இயற்றிய பஞ்சாக்கரப் பஃறொடையும் சேர்ந்து பண்டார சாத்திரம் பதினான்கு எனப் பெயர் பெற்றன. இவைகள் சைவ ஆதீனத் தலைவர்க ளாகிய பண்டார சந்நிதிகளால் இயற்றப்பட்டதால் பண்டார சாத்திரங்கள் எனப் பெயர் பெற்றன. அம்பலவாண தேசிகரின் காலம் கி. பி. 1605 என்பர் ஆராய்ச்சியாளர்.

17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருமலை நாய்க்கர் காலத்தில் சைவ சமயத்தைப் பரப்பிய பெருமை ஆசிரியர் குமரகுருபர அடிகளைச் சார்ந்ததாகும். இவர் பாண்டிய நாட்டில் ஸ்ரீவைகுண்டத்தில் வேளாண் மரபில் தோன்றியவர். இவர் தருமபுர ஆதீனத்தின் நான்காம் தலைவரான மாசிலா மணி தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்று, காசியில் ஒரு சைவ மடத்தினைத் தோற்றுவித்தார். இவர் இயற்றிய நூல்கள் திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணி மாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, பண்டார மும்மணிக் கோவை, காசிக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சி யம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சி யம்மை இரட்டை மணிமாலை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை முதலியனவாம்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தொண்டை நாட்டில் துறைமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்தவராவர். இவர் வீர சைவ மதத்தைச் சார்ந்தவர். சீகாளத்தி புராணத்தில் நக்கீரச் சருக்கம் கண்ணப்பர் சருக்கம் இவரால் பாடப்பட்டன. மற்றச் சருக்கங்கள் இவரது தம்பியர்களான கருணைப் பிரகாசர் வேலைய தேசிகர் என்பவரால் பாடப்பட்டன. இவர் செய்த நூல்கள் நன்னெறி, சோண சைல மாலை, பிரபு லிங்க லீலை, நால்வர் நான்மணி மாலை, திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், பழமலையந்தாதி, ஏசுமத நிராகரணம், திருக்கூவப் புராணம், பெரியநாயகி அம்மை விருத்தம் முதலியனவாம். வடமொழியிலுள்ள தர்க்க பரிபாஷை யென்ற நூலை இவர் மொழிபெயர்த்து உரைநடையில் எழுதியுள்ளார். இவரது காலம் கி. பி. 1752.

திருப்பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகளும் வீர சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவர் பேரூரில் வீர சைவ மடம் ஒன்று நிறுவியுள்ளார். இவர் வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார், கொலை மறுத்தல், நெஞ்சு விடுதூது முதலிய நூல்களை இயற்றினார். இவர் சிவப்பிரகாச சுவாமிகளின் மைத்துனராதலின் இவரது காலமும் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

## பதினெட்டாம் நூற்றாண்டு :

சாந்தலிங்க சுவாமிகளின் மாணாக்கரான சிதம்பர சுவாமிகள் திருப்போரூரில் வாழ்ந்தவர். அவர் தம் ஆசிரியரின் நூல்களுக்கு உரை வகுத்ததோடு பஞ்சாக்கர விளக்கம், உபதேசக் கட்டளை, உபதேச உண்மை, திருப்போரூர்ச் சந்நிதிமுறை, திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் முதலிய நூல்களை இயற்றினார். கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் விளங்கிய தாயுமானவர் (1706 - 1744) சோழநாட்டில் திருமறைக்காட்டில் பிறந்தவர். இவர் திருச்சிராப்பள்ளியில் அரசு செலுத்திய விஜய ரகுநாத சொக்கலிங்க நாயக்கர் சமஸ்தானத்தில் கணக்கர் தொழிலில் அமர்ந்திருந்தார். நாயக்க அரசர் இறந்ததும் இவர் தம் தொழிலை விடுத்து மௌனகுரு

என்பவரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டு பல தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கி ஞான யோகத்தில் நின்று முத்தி பெற்றார். இவர் அருளிச்செய்த பாடல்கள் பக்தியை உண்டாக்கவல்லன. அவைகளுள் வடசொற்கள் அதிகமாகப் பயின்றுள்ளன. எனினும் செய்யுள்நடை மிக எளியதாகும். இவரது பாடல்களில் பல சித்தாந்தக் கருத்துக்களைக் காணலாம்.

" பொய்கண்டார் காணுப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ"*

முதலிய இவரது வாக்கு இவர் சந்தான குரவர்களிடத்தில் வைத்த அன்பினைக்காட்டுவதாகும். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சிவஞான முனிவர் வடமொழியிலும் தமிழிலும் சிறந்த புலமை பெற்றவர். இவர் இயற்றிய நூல்கள் சோமேசர் முதுமொழி வெண்பா, கலைசை யந்தாதி, அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், முல்லைவாயில் அந்தாதி, சித்தாந்த மரபு கண்டன கண்டனம், காஞ்சிப் புராணம், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, சிவ ஞான போதப் பேருரையாகிய திராவிட மாபாடியம் முதலியன. இவர் கி. பி. 1784-ல் சித்திரை மாதத்தில் ஆயில்ய நக்ஷத்திரத்தில் சிவபரிபூரணத்தை அடைந்தார். சிவஞான முனிவரின் மாணவருள் ஒருவராகிய கச்சியப்ப முனிவர் திருத்தணிகைப் புராணம், சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ், திருவானைக்காப் புராணம், காஞ்சிப் புராணப் பிற்பகுதி, திருத்தணிகை ஆற்றுப்படை முதலிய நூல்களை இயற்றினார். "திருத்தணிகைப் புராணம் கற்பனை நலத்திலும் சொல்லருமையிலும் இணையற்றது."†

## பத்தொன்பதாம் நூற்றாண்டு :

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்த தமிழ்த் தொண்டும் சைவ சமயத் தொண்டும் ஆற்றியவர் ஆறுமுக நாவல

*குருமரபின் வணக்கம் - 4 - தாயுமானவர்.

†இலக்கிய வரலாறு—கா. சுப்பிரமணிய பிள்ளை - பக்கம்-436

ராவர். (1823-1879) தமிழ் உரைநடையின் தந்தை எனக் கூறலாம். பெரிய புராண வசனம், கந்த புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சைவ வினு விடை, சிறுவர்க் கான பால பாடங்கள், சிதம்பர மான்மிய வசனம் முதலியன இவரால் எழுதப்பட்டன. சைவ சமய நெறி, திருக்கோவை யார் உரை, பரிமேலழகர் உரை, பிரயோக விவேகம், கந்த புராணம், தருக்க சங்கிரகம் முதலிய நூல்களை இவர் பிழையற அச்சிட்டு வெளியிட்டனர். இவரது உரைநடை மிகவும் இனிய எளிய நடையில் அமைந்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகர் ஆறுமுக நாவலரவர்களைப் பாராட்டி அவருக்கு நாவலர் என்ற பட்டமும் அளித்தனர் என்பர். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த மஹா வித்துவான் - மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இணையற்ற பெரும் புலவர் எனக் கூறலாகும். பதினாறு தல புராணங்களையும், பத்துப் பிள்ளைத்தமிழ் நூல்களையும், பதினாறு அந்தாதிகளையும், நான்கு மாலை நூல்களையும், உலா, கோவை முதலிய பல வேறு நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் திருவாவடுதுறை ஆதீனப் புலவராக இருந்தமையால் அந்த ஆதீனத் தலைவர் மீதும் சில நூல்கள் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய நூல்களுள் பல இவருடைய மாணவர் மகாமகோ பாத்தியாய - டாக்டர் - உ. வே. சாமிநாத ஐயர் அவர்களால் வெளியிடப்பட்டன.

முருகதாச சுவாமிகள் : என்பவர் திருநெல்வேலியில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர். இவர் முருகன் திருவருள் பெற்றுப் பாடல் இயற்றும் வன்மை பெற்றார். தண்டபாணி சுவாமிகள் என்றும் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றும் இவருக்கு வேறு பெயர்கள் உண்டு. இவர் தில்லைத் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம், ஏழாயிரப் பிரபந்தம் என்னும் துதி நூல்களையும், ஆமாத்தூர்த் தல புராணம், அருணகிரிநாதர் புராணம் என்ற தல புராணங்களையும் இயற்றியுள்ளார். இவர் புலவர் புராணம் என்ற நூலில்

எழுபது புலவர்களின் வரலாற்றினை விளக்கியுள்ளார். வண்ணக் கவிகள் பாடுவதில் இவர் வல்லவர்.

19-ம் நூற்றாண்டில் விளங்கிய பாவலருள் முதல் இடம் பெறத்தக்கவர் இராமலிங்க சுவாமிகள் (1823 - 1874). இவர் 6000க்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய பாடல்களுக்குத் திருவருட்பா என்பது பெயர். இப்பாடல்கள் அனைத்தும் ஆறு திருமுறைகளாகப் பகுக்கப் பட்டுள்ளன. இவரது பாடல்கள் இனிய எளிய பயின்ற நடையில் அமைந்துள்ளதால் இவைகளைக் கற்றோரன்றி மற்றோரும் பாவலரன்றிப் பாமரரும் படித்து இன்புறுகின்றனர். இவரது குறிக்கோள் எம்மதமும் சம்மதம் எனப்படும் சமரச சன்மார்க்கமாகும். எல்லோரும் ஒரு குலம் எல்லோரும் ஓர் இனம் என்பதையும், சமயச்சண்டை கூடாது என்பதையும் பிற உயிர்களை வருத்துதல் கூடாது என்பதையும், சில சீர் திருத்தக் கொள்கைகளையும் இவர் தம் பாடல் மூலம் நமக்கு அறிவுரை புகட்டியுள்ளார். இவைகளேயன்றி மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் முதலிய உரைநடைப் பகுதியும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. இவர் சைவசமயாசாரியார் நால்வரைத் தம் குருவாகக் கொண்டுள்ளார் என்பது இவரது பாடல்களால் அறியக்கிடக்கின்றது. மக்கள் சைவ உணவை மேற்கொள்ளல்வேண்டும் என்பதை இராமலிங்க அடிகள் பல பாடல்களில் வற்புறுத்தியுள்ளார். அவற்றுள் ஒரு பாடலை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

“ மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில்
கண்விழித்து வயங்கும் அப்பெண்
உருவாணை உருவாக்கி இறந்தவரை
எழுப்புகின்ற வுறுவ னேனும்
கருவாணை யுறஇரங்காது உயிர்உடம்பைக்
கடிந்து உண்ணும் கருத்த னேல்எம்
குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறொ ணாதே ”*

* திருவருட்பா - இரண்டாந் திருமுறை - அறநிலை விளக்கம்-1

இராமலிங்க அடிகளாரின் குறிக்கோளினை அறிவதற்குத் துணையாக உள்ள ஒரு பாடலினைக் கூறி என் பேச்சினை முடித்துக்கொள்கின்றேன்.

"அப்பாநான் வேண்டுதல்கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கு எல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநினது அருட்புகழை யியம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே "†

---

# தேவார வைப்புத்தலங்கள்*

## சம்பந்தர் அருளியன (32)

1 அத்தங்குடி 1893
அத்தி(கிரி) 1885
*அமராவதி 2877
அறப்பள்ளி 1887
5 இடைப்பள்ளி 1887
உஞ்சேனைமாகாளம் 1892
காட்டேர் 1890
காற்றூர் 1891
குணவாயில் 1890
10 குத்தங்குடி 1893
குருந்தங்குடி 1893
குன்றளூர் 184
குன்றியூர் 1884
கூருர் 1884
15 *கோழி 2772, 2773
சிறப்பள்ளி 1887
துலை 1888
தேவன்குடி 1893
*தேனூர் 664
20 நற்குன்றம் 1892
நெடுவாயில் 1892
நெற்குன்றம் 1892
பூழியூர் 1891
*பொதியில் 546, 853
25 போற்றூர் 1891
மாட்டேர் 1890
*வஞ்சி 2772
வண்குடி 1893
*வரந்தை 658
30 வாதவூர் 1890
வாரணசி 1890
32 வெற்றியூர் 1889

---

† திருவருட்பா-சுத்தசன்மார்க்க வேண்டுகோள் - பாட்டு-1

*குறிப்பிட்ட எண்ணுடைய திரு. ம. பா. பதிப்புத் தேவாரப் பாசுரத்தில் இத்தலம் வருவது காண்க. தல விளக்கம் பின்னர் வரும்.
—தி. கி. நாராயணசாமி நாயடு.

## அப்பர் அருளியன (159)

1 அக்கீச்சுரம் 6962
அகத்தீச்சுரம் 6962
அசோகந்தி 6952
அயோகந்தி 6316
அண்ணல் வாயில் 6961
5 அணி அண்ணாமலை 63ம் பதிகம் 4767-4776
அத்தமலை 6963
அத்தீச்சுரம் 6962
அயனீச்சுரம் 6962
அரணநல்லூர் 6313
10 அரிச்சந்திரம் 6961
அளப்பூர் 6318, 6754, 6947, 6958
ஆடகேச்சுரம் 6962
ஆழியூர் 6950
ஆன்பட்டி (பேரூர்?) 6316
15 இடவை 6946
இடைக்குளம் 6964
இடைத்தானம் 6314
இரும்புதல் 6757
இளங்கோயில் 6959
20 இளமர் 6947
இறையான்சேரி 6947
உஞ்சேனைமாகாளம் 6951
உஞ்ஞைமாகளாம் 6317
உதயமலை 6963
உருத்திரகோடி 6951
25 ஊற்றத்தூர் 6953, 6958
எகுளீச்சுரம் 6317 (வெகுளீச்சுரம்)
எச்சில் 6947
எழுமூர் 6948 [6963
ஏமகூடம் 6961, 6948,

30 ஏமநல்லூர் 6947
ஏமப்பேறூர் 6946
ஏமம் 6314
ஏயீச்சுரம் 6314
ஏர் 6757, 6946 (ஏரார்) 6948
35 ஏழூர் 6948
ஓர் 6497, 6953
கச்சிப்பலதளி 6947 (தொகை)
கச்சிமயானம் 7203
கஞ்சாறு 6951
40 கடம்பை இளங்கோயில் 6948
கடையக்குடி 6957
கண்ணை 6949
கந்தமாதனம் 6752, 6963
கரபுரம் 6313
45 கருந்திட்டைக்குடி 6957
கருமாரி 6317
கழுநீர்க்குன்றம் 6373
களக்குடி 6957
காம்பீலி 6945
50 காளிங்கம் 6311
காறை 6949, 7035 (காருயில் ?)
குக்குடேச்சுரம் 6962
குணவாயில் 6961
குமரிகொங்கு 6952
55 குன்றியூர் 6948
கூந்தலூர் 6952,
கூழையூர் 6952
கொங்கணம் 6948 [6948
கொடுங்கோளூர் 6370,

60 கொண்டல் 6760
கொல்லி (மலை) 5565
குளிரறைப்பள்ளி,6944
அறைப்பள்ளி 6955
கோட்டுக்கா 6311
கோட்டுக்காடு 6946
கோத்திட்டை 6946
(க்குடிவீரட்டம்) 6956
65 கோவந்தபுத்தூர் 5940
சடைமுடி 6946
சாத்தங்குடிதளி 6504
சாலைக்குடி 6946
சித்தவடம் 4171, 6318
70 சிவப்பள்ளி 6955
சூலமங்கை 6953
செங்குன்றூர் (கொடி
மாடச்செங்குன்றூர் ?)
6948
செந்தில் 6478
செம்பங்குடி 6957
75 சேற்றூர் 6958
சையமலை 6963
சோமீச்சுரம் 6953
ஞாழல் வாயில் 6961
ஞாழற்கோயில் 6959
80 தக்களூர்6254,6759,6946
தஞ்சை 6951
தஞ்சைத்தளிக்குளம்6759
தண்டலை 6760
தவத்துறை 6945
85 தவப்பள்ளி 6955
தளிக்குளம் 6964, 6759
திங்களூர் 6497 [6962
திண்டீச்சுரம் 6314,6952,
திரிபுராந்தகம் 6311
90 திருக்குளம் 6964
திருவேட்டி 6313
துடையூர் 6958
துவையூர் 6958
தெள்ளாறு 6964
95 தென்னூர் 6654
தேரூர் 6497 [6957
தேவன்குடி 6307, 6944,
தேவீச்சுரம் 6311
தேனூர் 6659
100 தேரழூர் 6948, 6958
நந்திகேச்சுரம் 6962
நல்லக்குடி 6957
நல்லாற்றூர் 6958
நாகளேச்சுரம் 6962
105 நாலாறு 6964
நியமநல்லூர் 6948
நியமம் 6373
நீலக்குடி (திருநீலக்குடி ?)
6957
நெடுவயல் 6961
110 நெய்தல் வாயில் 6961
பஞ்சாக்கை 6951
பரப்பள்ளி 6955
பாதாளம் 6950
பாபநாசம் 6312
115 பாற்குளம் 6370
பிடவூர் 6312, 6945
பிரம்பில் 6947
புதுக்குடி 6957
புரிச்சந்திரம் 6961
120 புலிவலம் 6962, 6954
புவனம் 6962
புற்குடி 6957
பூந்துறை 6965

பெருங்கோயில் 6954, 6959
125 பெருந்துறை 6945, 6965
பேராவூர் 6754, 6945, 6958
பேரூர் 6759, 6945
பொதியமலை 6951, 6953
பொய்கை நல்லூர் 6954
130 பொருப்பள்ளி 6955
மகேந்திரமாமலை 6963
மணற்கால் 6504
மணிக்கோயில் 6959
மணிமுத்தம் 6312
135 மந்தாரம் 6949
மாகாளேச்சுரம் 6962
மாகுடி 6957
மாதானம் 6951
மாநதி 6310
140 மாதிருபம் 6318
மாவூர் 6497
முளையூர் 6944
மூவலூர் 5887, 6659
மேரு 6310, 6963
145 வழுவூர்-வழுவை 6951, 6956
வளவி 6370
வளைகுளம் 6749, 6835, 6964
வாரணசி 6317, 6949
வாவீசுரம் 6951
150 விடைவாய்க்குடி 6957
விந்தமாமலை 6963
விராடபுரம் 6949
விவீச்சுரம் 6951
விளத்தொட்டி 6949
155 வெகுளீச்சுரம் 6317 (எகுளீச்சுரம் ?)
வெற்றியூர் 6951, 4303, 5476
வேங்கூர் 6950
வேதமலை 6963
159 வேதீச்சுரம் 6951


## சுந்தரர் அருளியன (75)


1 அமுதனூர் 7337
அளப்பூர் 7705
ஆழியூர் 7342
இளையான்குடி 7647
5 என்னூர் 7341
கச்சையூர் 7537
கஞ்சனூர்(வட) 7343
கஞ்சாறு 7648
கடங்களூர் 7536
10 கருப்பூர் (இன்) 8221
களந்தை 7622
காட்டேர் 7702
காரிகரை 7536
காவம் 7537
15 கிழை 7340
கிள்ளிகுடி 7342
கீழைவழி 7340
கீழையில் 7375
குடப்பாச்சில் 7375
20 குண்டையூர் 7425, 7426, 7428, 7430
குரக்குத்தளி 7703

குன்றையூர் 7647
கைம்மை 7341
கொண்டல் 7337
25 கோத்திட்டை 7235
தக்களூர் 7336
தகடூர் 7336
தஞ்சாக்கை 7344
தஞ்சை 7344, 7625
30 தண்டங்குறை 7337
தண்டந்தோட்டம் 7337
தண்டலை 7337
தாழையூர் 7336
திங்களூர் 7539
35 திருமலை 7342
திருவாதிரையான்
பட்டினம் 7539
தெள்ளாறு 8165
தென்னூர் 7341
தென்பனையூர் 7343
40 தேங்கூர் 7339
தேசனூர் 7541
தேவனூர் 7341
தேறனூர் 7542
நாங்கூர் 7339, 7707
45 நாலனூர் 7338
நிறைக்காடு 7704
நிறையனூர் 7538
நின்றவூர் 7627
பந்தையூர் 7534
50 பன்னூர் 7341
பாங்கூர் 7339
பாசனூர் 7541
பாம்பணி 7344
பிடவூர் 8206
55 புரிசை 7341
பூங்கூர் 7339
பெருமூர் 7538
பேரூர் 7705, 8065, 8146*
பேறனூர் 7542
60 பொன்னூர் 7341
மகோதை
மாகாளம் 7706
மாட்டூர் 7702
மிழலை (மிழலை நாடு) 7340
65 மிறைக்காடு
மூலனூர் 7338
வடபேறூர் 7537
வரிஞ்சை 7623
விடங்களூர் 7536
70 விளத்தூர் 7343
வெள்ளாறு 7610
வெற்றியூர் 7338
வேங்கூர் 7707*
வேலனூர் 7338
75 வேளூர் 7343